# சூத்திரம்

www.sooddram.com

The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | **Contact us at: sooddram@gmail.com**

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக

**சூத்திரம்**
- முதற்பக்கம்
- FONTS/எழுத்துரு
- சர்வதேச நேரம்
- தொடர்புகளுக்கு

**கட்டுரைகள்**
- பொதுவிடயம்
- அரசியல் சமூக ஆய்வு
- இலங்கைத் தமிழர் போராட்டம்
- இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
- சர்வ தேச அரசியல்
- அரசியல் தீர்வு

**கவிதைகள்**
- சமூக விழிப்பு
- போராட்டம்
- பொது விடயம்

**புகைப்படங்கள்**
- எமது வாழ் நிலங்கள்
- போராட்டங்கள்
- போராட்ட தடயங்கள்

**இணையத்தளங்கள்**
- கண்ணோட்டம்
- பூந்தளிர்
- தூ
- தேனி

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்……

***நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 17)***

(கிறேசியன், நாவாந்துறை)

அனைவரிடத்திலும் சொல்லிவிட்டு வரிசைக்கு வந்தேன். அப்போது மஞ்சு என்ற புலி விலங்கு நின்று கொண்டிருந்தார் அவரிடம், அண்ணே, "நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றேன். என்ன என்றார், அந்தக் கிடங்கில் இருக்கும் பெடியங்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு வர வேண்டும் என்றேன், கெட்டவார்த்தையைப் பயன்படுத்தி, உடைப்பன் உன்னை, போடா மரியாதையா என்றார்.

சிறிது நேரத்தில் லொறியின் பின்கதவைத் திறந்து ஏறச் சொன்னார்கள். 35 பேர் வரை ஏறினோம். தார்ப்பாயால் பின் பகுதியை மறைத்தனர். லொறி புறப்பட்டது! எந்தப் பாதையால் செல்கின்றனர் என்பது தெரியாது. வெளியில் பார்ப்பதற்கு முடியவில்லை. சுமார் ஐந்துமணி நேரம் லொறி பயணித்திருக்கும், மாலை நேரம் நெருங்கிய வேளை யாழ்ப்பாணம் தட்டாதெருவில் இருக்கும் இவர்களது முகாமுக்கு (பேஸ்) முன்நின்றது லொறி! இறங்குங்கள் என்றனர். இப்போது சற்று மரியாதையான வார்த்தைகள் எங்கள் காதுகளில் விழ ஆரம்பித்தன.

தட்டாதெரு முகாமில் பொன் மாஸ்டர் என்பவரும் வேறு சிலரும் இருந்தனர். இவர்கள் அரசியல் பிரிவு நபர்கள் என்று கூறிக்கொண்டனர். எங்களை உள்ளே அழைத்த அவர்கள், புன்சிரிப்புக்களை அள்ளி வழங்கினார்கள். இரவு ஏழு மணியளவில் ஆளுக்கு

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்…….**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

ஓர் பார்சல் கொடுத்தனர். அதில் புட்டும் மீன்குழம்பும் கலந்து இருந்தது. 18 மாதங்களுக்குப் பின் மாற்று உணவு வழங்கப்பட்டது. சங்கிலி காப்பு எதுவும் மாட்டப்படவில்லை! அதே சறம்தான். ஆயினும் என்னிடமிருந்து எடுத்திருந்த சேட்டை திரும்பவும் கொடுத்திருந்தனர். அதைச் சுருட்டி வைத்திருந்தபடியால் எனத உடலுடன் பொருந்தாமல் கசங்கி? முறைத்து? விறைத்து நின்றது. உடை எப்படியிருந்தாலும் பறவாயில்லை உடல் உருப்படியாக வீடு போய்ச் சேர்ந்தால் போதும் என்று இருந்தது. எங்களுடன் வந்த ஏனைய இரண்டு லொறிகளும் எங்கு சென்றன என்பது தெரியாது. நாங்கள் முப்பத்தைந்து பேரும் இரண்டு அறைகளிலும் பிரிக்கப்பட்டு உறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டோம். நாளைக் காலை டொமினிக் அண்ணன் வருவார் என்று கூறினர் அங்கிருந்தவர்கள்.

முதலில் ஏன்தான் விடிந்ததோ என்று நினைத்த நான், இப்போது இன்னும் ஏன் விடியவில்லை என்று சிந்திக்கலானேன்! விடிந்தது. கிணத்தடிக்குச் சென்று முகம் கழுவும்படி கூறினர். அங்கே சவற்காரம் இருந்தது. ஒன்றுக்கு நான்கு தடவை முகத்துக்கு சோப் போட்டு உரஞ்சிக் கழுவினேன். ஏனையோரும் அப்படித்தான் செய்தனர். காலை உணவாக இடியப்பமும் சொதியும், சாம்பாரும் கொடுத்தார்கள். உண்டுவிட்டு டொமினிக் அண்ணன் வருகைக்காகக் காத்திருந்தோம்.

ஒன்பது மணியளவில் டொமினிக் அண்ணன் வந்தார். தடித்த உருவம் கொண்ட அவர்? வந்ததும், அனைவரையும் அழைத்தார். தனது உரையை ஆரம்பித்தார்:- “நீங்கள் எல்லோரும் எங்களது சிறையிலிருந்து வந்துள்ளீர்கள், அங்கு சில சிரமங்களைச் சந்தித்திருப்பீர்கள், அவற்றையெல்லாம் நீங்கள் மனிதில் வைத்து கொள்ளக் கூடாது! உங்களை விடுதலை செய்ததும் மீண்டும் இயக்கங்களில் சேரக்கூடாது. எங்களுக்கு எதிராகச் செயல்படக்கூடாது,

நீங்கள் விரும்பினால் எங்கள் இயக்கத்தில் இணைந்து செயற்படலாம். நீங்கள் இணைந்து செயல்படுவதற்கான வழிமுறைகளை நான் செய்து தருகிறேன்? எங்கள் இயக்கம் பரந்து விரிவடைந்துள்ளது. சிங்கள அரசாங்கம் கூட எங்களுடைய அனுமதி இல்லாமல் யாழ்ப்பணத்துக்குள் வரமுடியாது. இனிமேல் வேறு எந்த இயக்கத்தையும் இயங்கவிட மாட்டோம். அப்படி இயங்கினால் முற்றாக அழித்துவிடுவோம். எனவே நீங்கள் எங்கள் இயக்கத்தில் இணைந்தால் நல்லது என்று நினைக்கிறேன்” என்று கூறி முடித்துவிட்டு ஒவ்வொருவராக கேட்க ஆரம்பித்தார். ஆனால் யாருமே இவர்களது இயக்கத்தில் இணையச் சம்மதிக்கவில்லை! ஏனெனில் இவர்களது மறுபக்கம் எப்படி என்பதைக் கண்டதுமட்டுமல்ல, அவற்றை அனுபவித்து வந்துள்ளனர். ஆதலால்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***
நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறி அதனால் இயலாது என்று கூறினர்.

என்னுடைய முறை வந்ததும் நான் சொன்னேன், “ எனக்கு ஆறு பெண் சகோதரர்கள் அவர்கள் அனைவரையும் கரைசேர்க்க வேண்டியது என்னுடைய பொறுப்பு, நான் வெளியில் சென்று உழைத்து எனது சகோதரர்களைக் காப்பாற்ற வேண்டும். எனவே நான் உங்கள் இயக்கத்தில் இணைய முடியாத நிலையில் இருக்கிறேன்” என்று கூறிமுடித்து அமர்ந்தேன். இறுதியில் டொமினிக் அண்ணாவின் பேச்சு எடுபடவில்லை. ஒரு நபரை என்றாலும் சம்மதித்து விடலாம் என்று முயற்சித்தார் டொமினிக். இரண்டு மணி நேர வீண் பேச்சுக்குப் பிறகு நீங்கள் வீடுகளுக்குச் செல்லலாம் என்று கூறி வெளியேறினார் டொமினிக்.

11 மணியளவில் நீங்கள் போகலாம் என்று கூறினார் அங்கிருந்த புலி ஒருவர். ஒவ்வொருவராக வெளியேறினோம். யாருக்கும் போக்குவரத்துக்கான காசு கிடையாது. அதைப்பற்றி யாரும் கேட்கவும் இல்லை! இவர்ளிடத்திலிருந்து தப்பித்தால் போதும் என்றுதான் நினைத்திருந்தனர் அனைவருமே! எனது வீடு தட்டார் தெருவிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் வரும். நான் வேகமாக நடக்க ஆரம்பித்தேன்.

பகல் நேரம் தெருவில் வருவோர் போவோர் என்னைக் கீழும் மேலுமாகப் பார்த்துக் கொண்டு சென்றனர். காரணம் மொட்டைத்தலை, கசங்கிய சேட், நொந்து போன சறம், கறுத்த உருவம், மெலிந்துபோன உடல் இப்படிப் பல மாறுபட்ட வித்தியாசமான தோற்றத்தைக் கண்டவர்கள் மிரண்டு ஒதுங்கி நடந்தனர்.

துணுக்காயில் இந்த விலங்குகளிடம் இருந்த போது மூன்று நான்கு மாதத்துக்கு ஒரு தடவை மொட்டை அடித்துக் கொள்வேன். காரணம் சவற்காரம், சம்போ அங்கு கிடையாது. எனவே தலைமயிர் வளர்ந்தால் வியர்த்து அழுக்கேறிவிடும். இதனால் நான் மொட்டை போட்டுக்கொள்வேன். விடுதலைக்கு ஒரு வாரத்துக்கு முன்னர்தான் அப்படி மொட்டை போட்டிருந்தேன். எனவே என்னை அந்தக் கோலத்தில் குழந்தைகள் பார்த்திருந்தால் பிள்ளை பிடிக்காரன் என்று கூச்சலிட்டு கல்லால் எறிந்திருப்பார்கள். நான் வேலையாக அப்படி எந்தக் குழந்தையும பார்த்துவிடவில்லை.

பலதரப்பட்ட சிந்தனையுடன் நடந்து கொண்டே இருந்தேன். நாள்பட்ட துன்பங்கள் தீர்ந்துவிட்டது என்று மகிழ்ந்தேன். வரவிருக்கும் நாள்களில் பட்டுவந்த கொடுமையை விட மிகவும் மோசமான கொடுமையைச் சந்திக்கப் போகிறேன் என்பது புலனுக்கு எட்டாமல் அப்போது இருந்தது.

துணுக்காய் சிறையை உருவாக்கி அதில் தமிழ் இளைஞர்களை வதைக்க வேண்டும் என்ற இந்தக்


(சாகரன்)

வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”***
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

கொடிய சிந்தனையை உருவாக்கியவர் யார் என்று தெரியாது. ஆனால் பொட்டு அம்மான்தான் இந்தக் கொடுஞ்சிறையின் ஸ்தாபகர் என்று காவல் புலிவிலங்குகள் கதைத்துக் கொண்டனர். மனித நாகரீகத்துக்கு முற்றிலும் முரணான விசாரணை முறையை எங்கள் இனத்தின் மீதே பரீட்சித்துப்பார்த்தது யாராலும் மன்னிக்க முடியாத குற்றமாகும். இந்தச் சிறையில் சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் விலங்கிட்டு குழிகளுக்குள் இறக்கித் தண்டனை வழங்கினால்தான் தாங்கள் செய்துவிட்ட தவறை உணர்வார்கள் அதுவரை வரி என்பது பிறருக்குத்தானே!

நான் நடந்தேன் வீடு நோக்கி, தெருவில் வந்து கொண்டிருந்த எவரையும் நான் நிமிர்ந்து பார்க்க வில்லை. எனது கோலம் எனக்கே அருவருப்பை ஏற்படுத்தியது. தமிழர் நிலையை நினைத்து நொந்துகொண்டே எனது வீட்டு வாசலை அடைத்தேன்.

எனது தாயாரும், அக்காவும் என்னைப்பார்த்ததும் ஓடிவந்து கட்டி அணைத்து கதற ஆரம்பித்தனர். ஏனைய சகோதரிகளும் சூழ்ந்து கொண்டு எனது கோலத்தைக் கண்டு அழுவதற்கு ஆரம்பித்து விட்டனர். அடித்தார்களா, குத்தினார்களா, கொடுமைப்படுத்தினார்களா என்று பலவிதமான கேள்விகளைக் கேட்டுத் துளைத்து எடுத்தனர். நானோ எதுவும் நடக்கவில்லை, நல்லபடியாக அனுப்பிவைத்தனர் என்று உண்மைக்கு மாறாக விளக்கம் கொடுத்தேன் என் சகோதரிகளுக்கு!

முதலில் இரத்தச் சேட்டையும் சறத்தையும் கழற்று என்றார் என் அம்மா! நேராக கிணற்றுக்குச் சென்று குளித்தேன். அக்கம்பக்கத்து வீட்டார் நலம் விசாரிக்க வந்தனர். அவர்களும் கேள்விகளால் குடைந்தனர். அனைவருக்கும் என்னால் முடிந்த பொய்களைச் சொல்லி நல்ல முறையில் அனுப்பிவைத்தனர் என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தனர் என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தேன்.

மதிய உணவை அம்மா கொடுத்தார். அதை நான் உண்ணும் போது அம்மா கேட்டார், தம்பி உண்மையைச் சொல். அவர்கள் உன்னைக் கொடுமைப்படுத்தவில்லையா? நான் சொன்னேன், "இல்லை அம்மா, அவர்கள் ஏன் இந்த இயக்கத்தில் சேர்ந்தனீ என்று கேட்டார், தெரியாமல் சேர்ந்துவிட்டேன் என்று சொன்னேன். அதுக்குப் பிறகு என்னை வவுனிக்குளத்துக்குக் கொண்டு போய் அங்கே இவ்வளவு நாளும் வைத்திருந்தனர். பிறகு இப்ப தட்டார்தெருவுக்குக் கொண்டு வந்து விடுடுவிட்டினம்" என்று கூறி அம்மாவை நம்பவைத்தேன்!


**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்….?**

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

அம்மா ஆரம்பித்தார்,,

(தொடரும்…)

(யஹியா வாஸித்)

கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுதலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்

- சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா? - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com